பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

15 04 2025 7 15

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. தேசிய அளவிலான இலக்குகளை எட்டுவதற்கு இந்திய ஆட்சிப்பணி அதிகாரிகள் திறம்பட செயல்பட வேண்டுமென்று குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு வலியுறுத்தியுள்ளார்.
2. டென்மார்க்-வுடனான இருதரப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து பிரதமர் திரு நரேந்திரமோடி, அந்நாட்டு பிரதமருடன், தொலைபேசி மூலம் ஆலோசனை நடத்தினார்.
3. மத்திய அரசின் முயற்சியின் காரணமாக இந்திய ஹஜ் யாத்ரிகர்களுக்கான இணையதளத்தை மீண்டும் திறக்க சௌதி அரேபியா ஒப்புக் கொண்டுள்ளது.
4. நேஷனல் ஹெரால்டு செய்திதாள் முறைகேடு தொடர்பான வழக்கில் காங்கிரஸ் மூத்த தலைவர்கள் திருமதி சோனியாகாந்தி, திரு ராகுல்காந்தி ஆகியோர் மீது அமலாக்கத்துறை குற்றப்பத்திரிகை தாக்கல் செய்துள்ளது.
5. ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் கொல்கத்தாவுக்கு எதிரான ஆட்டத்தில் டாஸ் வென்ற பஞ்சாப் அணி முதலில் பேட் செய்ய தீர்மானித்தது.

*---- இனி விரிவான செய்திகள் ---*

**[]<<<>>>[]**

இந்திய ஆட்சிப்பணி அதிகாரிகள் உள்ளூர் அளவிலும், மாநில அளவிலும் மேற்கொள்ளும் மக்கள் நலப் பணிகள், தேசிய அளவிலான இலக்குகளை எட்டும் வகையில் அமைய வேண்டும் என குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு கேட்டுக் கொண்டுள்ளார்.

குடியரசுத் தலைவர் மாளிகையில் இன்று தம்மை சந்தித்த 2023-ஆம் ஆண்டு பிரிவைச் சேர்ந்த இந்திய ஆட்சிப் பணி அதிகாரிகளிடையே பேசிய அவர், குடிமைப்பணி அதிகாரிகள் தங்களுக்கான உரிமைகள் மற்றும் கடமைகளை மனதில் கொண்டு பணியாற்றுமாறு அறிவுறுத்தினார்.

மக்களின் வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய வகையில் அர்ப்பணிப்பு மற்றும் உறுதிப்பாட்டுடன் அதிகாரிகள் செயல்பட வேண்டுமெனவும் அவர் வலியுறுத்தினார்.

நலிந்த பிரிவினரின் மேம்பாட்டிற்காக சிறப்பு முயற்சிகளை மேற்கொள்ளுமாறும் திருமதி திரௌபதிமுர்மு கேட்டுக் கொண்டார்.

**[]<<<>>>[]**

இந்தியா – டென்மார்க் இடையேயான இருதரப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்தும் நோக்கில் பிரதமர் திரு நரேந்திரமோடி இன்று டென்மார்க் பிரதமர் திரு Mette Frederiksen-வுடன் தொலைபேசி வழியாக ஆலோசனை நடத்தினார்.

இது தொடர்பாக திரு நரேந்திரமோடி வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில் இரு நாட்டு மக்களுக்கும் பயன்தரத்தக்க வகையில் ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கான வழிமுறைகள் குறித்து டென்மார்க் பிரதமருடன் தாம் ஆலோசனை நடத்தியதாக கூறியுள்ளார்.

உலக மற்றும் மண்டல அளவிலான முக்கிய விஷயங்கள் குறித்தும் இந்த உரையாடலில் விவாதித்ததாக திரு நரேந்திரமோடி குறிப்பிட்டுள்ளார்.

**[]<<<>>>[]**

சிறுபான்மையின மக்களின் உரிமைகளை பாதுகாக்கவும், நிலங்கள் சட்டவிரோதமாக எடுக்கப்படுவதை தடுப்பதற்காகவுமே வக்ஃப் திருத்தச் சட்டம் கொண்டுவரப்பட்டுள்ளதாக மத்திய சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் திரு கிரண் ரிஜிஜூ தெரிவித்துள்ளார்.

கேரள மாநிலம் கொச்சியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இம்மாநிலத்தில் உள்ள **Munambam** பகுதியில் உள்ள நிலத்தை வக்ஃப் நிலமாக அறிவிப்பதை அனுமதிக்க முடியாது என்று கூறினார்.

அனைத்து தரப்பு மக்களின் உரிமைகளும் பாதுகாக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

வக்ஃப் திருத்தச் சட்டம் நடைமுறைக்கு வந்துவிட்டதால் முனாம்பம் பகுதியில் உள்ளது போன்ற நிலைமை நாட்டின் வேறு எந்த பகுதியிலும் இனி ஏற்படாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

வக்ஃப் திருத்தச் சட்ட விவகாரத்தில் எதிர்க்கட்சிகள் மக்களை தவறாக வழிநடத்துவதாக குற்றம்சாட்டிய திரு கிரண் ரிஜிஜூ, பல்வேறு இஸ்லாமிய அமைப்புகளும் இந்த சட்டத்தை ஆதரிப்பதாகத் தெரிவித்தார்.

[]<<<>>>[]

மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக இந்திய ஹஜ் பயணத்திற்கான இணையதளத்தை மீண்டும் திறக்க சௌதி அரேபியாவின் ஹஜ் அமைச்சகம் ஒப்புக் கொண்டுள்ளதாக மத்திய சிறுபான்மையினர் நல அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இந்தியாவிலிருந்து ஹஜ் யாத்திரைக்கு ஏற்பாடு செய்யும் தனியார் குழுக்களுக்கான ஒதுக்கீட்டில் யாத்திரை மேற்கொள்வோரின் எண்ணிக்கை குறைக்கப்பட்டதாக வெளியான தகவல் குறித்து அமைச்சகம் விளக்கம் அளித்துள்ளது.

மத்திய அரசு மேற்கொண்ட முயற்சிகள் காரணமாக மினாவில் உள்ள இடவசதி அடிப்படையில் பத்தாயிரம் யாத்ரிகர்களுக்கான ஏற்பாடுகளை மேற்கொள்ள ஹஜ் இணையதளம் திறக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

[]<<<>>>[]

நேஷனல் ஹெரால்டு செய்திதாள் தொடர்பான சட்டவிரோத பண பரிவர்த்தனை வழக்கில் காங்கிரஸ் மூத்த தலைவர்கள் திருமதி சோனியாகாந்தி, திரு ராகுல்காந்தி ஆகியோர் மீது அமலாக்க இயக்குநரகம் இன்று குற்றப்பத்திரிகை தாக்கல் செய்துள்ளது.

இந்த வழக்கை விசாரித்து வரும் தனி நீதிபதி திரு **Vishal gogne** குற்றப்பத்திரிகையை ஆய்வு செய்த பின் விசாரணையை இம்மாதம் 25-ஆம் தேதிக்கு ஒத்தி வைத்தார்.

காங்கிரஸ் மூத்த தலைவர் திரு சாம் பெட்ரோடா, திரு சுமன்துபே ஆகியோரின் பெயர்களும் குற்றப்பத்திரிகையில் இடம்பெற்றுள்ளன.

[]<<<>>>[]

சட்டவிரோத பண பரிவர்த்தனை வழக்கில் காங்கிரஸ் மூத்த தலைவர் திருமதி பிரியங்கா-வின் கணவர் திரு ராபர்ட் வத்ராவிடம் அமலாக்கத் துறையினர் இன்று விசாரணை மேற்கொண்டனர்.

ஹரியானா மாநிலம் குருகிராமில் திரு வத்ராவுக்குச் சொந்தமானம் நிறுவனம், நிலம் வாங்கியதில் சட்டவிரோத பண பரிவர்த்தனை நடைபெற்றதாக என்பது குறித்து விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

இன்று காலை அமலாக்கப் பிரிவினர் அழைத்ததன் பேரில் புதுதில்லியில் உள்ள அமலாக்க இயக்குநரகத்தின் தலைமையகத்துக்கு திரு வத்ரா சென்றிருந்தார்.

[]<<<>>>[]

சமுதாயத்தில் அடித்தள அளவில் மேற்கொள்ளப்படும் வளர்ச்சிப் பணிகளின் மூலமே இந்தியாவை வளர்ச்சியடைந்த நாடாக மாற்றுவது என்ற இலக்கை அடைய முடியும் என்று வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

குஜராத் மாநிலம், நர்மதா மாவட்டத்தில் தமது நாடாளுமன்ற உறுப்பினர் மேமம்பாட்டு நிதியிலிருந்து கட்டபட்ட சுமார் 11 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு திட்டங்களை தொடங்கி வைத்த அவர், புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார்.

**Lachhras** கிராமத்தில் கட்டப்பட்ட அதிநவீன அங்கன்வாடி மையம், ஸ்மார்ட் வகுப்பறை மற்றும் **Rajpipla** பகுதியில் அமைக்கப்பட்டுள்ள ஜிம்னாஸ்டிக் பயிற்சி அரங்கையும் திரு ஜெய்சங்கர் திறந்து வைத்தார்.

**Rajpipla** அஞ்சலகத்தில் அமைக்கப்பட்டுள்ள பாஸ்போர்ட் சேவை மையத்தையும் அமைச்சர பார்வையிட்டார்.

[]<<<>>>[]

குழந்தை கடத்தல் தொடர்பான வழக்குகளை விசாரணை நீதிமன்றங்கள் ஆறு மாதத்திற்குள் முடிக்க வேண்டும் என்பது உள்ளிட்ட கடுமையான வழிகாட்டு நெறிமுறைகளை உச்சநீதிமன்றம் இன்று வெளியிட்டுள்ளது.

உத்திரபிரதேசத்தைச் சேர்ந்த குழந்தை கடத்தல் தொடர்பான வழக்கை விசாரித்த நீதிபதிகள் திரு பர்த்திவாலா, திரு மகாதேவன் ஆகியோரைக் கொண்ட பெஞ்ச், உயர்நீதிமன்றங்கள், கீழமை நீதிமன்றங்களுக்கு வழக்குகளை குறித்த காலத்தில் முடிப்பதற்கான உத்தரவுகளை பிறப்பிக்க வேண்டுமென்று அறிவுறுத்தியது.

குழந்தை கடத்தல் தொடர்பான வழக்குகளை தினமும் விசாரித்து தாமதமின்றி நீதி கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் அறிவுறுத்தியது.

குழந்தை கடத்தல் வழக்குகளில் ஜாமின் கோரி தாக்கல் செய்யப்படும் மனுக்களுக்கு முடிவெடுப்பதில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டுமென்றும் நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

மருத்துவமனையிலிருந்து பிறந்த குழந்தை கடத்தப்பட்டால் அந்த மருத்துவமனையின் அங்கீகாரத்தை ரத்து செய்வதற்கான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டுமென்றும் உச்சநீதிமன்றம் கூறியுள்ளது.

**[]<<<>>>[]**

மேற்குவங்க மாநிலத்தில் வன்முறையால் பாதிக்கப்பட்ட முர்ஷிதாபாத் மாவட்டத்தில் இயல்பு நிலை திரும்பி வருகிறது.

மத்திய, மாநில காவல் படையினர், அதிரடி விரைவுப்படையினர் உள்ளிட்டோர் இம்மாவட்டத்தில் கலவரத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் தீவிர ரோந்து பணியில் ஈடுபட்டுள்ளனர்.

கடைகள் மற்றும் வர்த்தக நிறுவனங்கள் திறக்கப்பட்டுள்ளன.

இதனிடையே வன்முறையால் இரண்டு பேர் கொல்லப்பட்ட ம்பவத்தில் காவல்துயினர் இருவரை கைது செய்துள்ளனர்.

வன்முறை தொடர்பான வழக்குகளில் இதுவரை 223 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வதந்திகளை பரப்பிய ஆயிரத்து 93 சமூக ஊடங்களை முர்ஷிதாபாத் மாவட்ட நிர்வாகம் முடக்கியுள்ளது.,

**[]<<<>>>[]**

தமிழகத்தில்சேலம் மாவட்டத்தில் ஐ டி ஐ தொழில் பயிற்சி முடித்த இளைஞர்களுக்கு பிரதமரின் தொழில் பழகுநர் பயிற்சி திட்டத்தின் மூலம் வேலைவாய்ப்புகள் உறுதி செய்யப்பட்டு வருகிறது.

ஏழை எளிய குடும்பங்களைச் சேர்ந்த இளைஞர்கள் இந்த திட்டத்தின் மூலம் மிகுந்த பயன்பெற்று வருகின்றனர்.

இந்த திட்டம் வேலைவாய்ப்பு பெறுவதற்கும், வருமானம் பெறுவதற்கும் வழி ஏற்படுத்தி தந்துள்ளதாக பயிற்சி பெற்ற மாணவிகள் எமது செய்தியாளரிடம் தெரிவித்தனர்.

*( சவுண்ட்பைட் - மாணவிகள் ) --36--- செகண்ட்*

**[]<<<>>>[]**

ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் பஞ்சாப் அணி - கொல்கத்தா அணியை எதிர்கொள்கிறது.

சண்டிகரில் இன்னும் சற்று நேரத்தில் தொடங்க உள்ள இப்போட்டியில் டாஸ் வென்ற பஞ்சாப் அணி முதலில் பேட் செய்ய தீர்மானித்தது,

**[]<<<>>>[]**

இந்திய பளுதூக்கும் சம்மேளனத்தின் தடகள ஆணைய தலைவராக மீராபாய் சானு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

துணைத்தலைவராக சதிஷ்குமார் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

**[]<<<>>>[]**

தேசிய சீனியர் ஆடவர் ஹாக்கி சாம்பியன் போட்டியின் மூன்றாவது இடத்துக்கான போட்டியில் உத்திரபிரதேச அணி ஐந்து – ஒன்று என்ற கோல் கணக்கில் மணிப்பூர் அணியை வென்று வெண்கலப்பதக்கத்தை கைப்பற்றியது.

ஜான்ஸியில் தற்போது நடைபெற்று வரும் இறுதி ஆட்டத்தில் மத்தியப்பிரதேசம் - பஞ்சாப் அணிகள் விளையாடி வருகின்றன.